
நகர் ஊரமைப்பு துறை

வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம் / மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

தாராபடவேடு மதுரா மெட்டுகுளம் ஊராட்சி / கிராமம்

வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம் – வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம் / ஊராட்சி ஒன்றியம், தாராபடவேடு மதுரா மெட்டுகுளம் ஊராட்சி / கிராமம், சர்வே எண் : 164/1சி–ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.



இணையதள விண்ணப்பம் எண்	:	Z12X2TI4
அளவு	:	1 : 400
கோப்பு எண்	:	VLR / Z12X2TI4 / 066 - 2023

குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு	:	9600.00 ச.மீ. (அ) 2.37 ஏக்கர்
கோரிய மனைகள்	:	39
ஒதுக்கிய மனைகள்	:	37
மனுதாரர் உபயோகம்	:	103.00 ச.மீ.
மனைப்பிரிவின் எல்லை	:	
நிலையிலுள்ள சாலை	:	

பொது ஒதுக்கீடு :

உத்தேச சாலை	:	
மனைப்பிரிவின் பரப்பு	:	9600.00 ச.மீ. (அ) 2.37 ஏக்கர்
மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகளின் பரப்பு	:	3468.88 ச.மீ.
	:	மனைப்பிரிவின் மொத்த பரப்பு – உத்தேச சாலைகளின் பரப்பு
		(9600.00 ச.மீ. – 3468.88 ச.மீ.) = 6131.12 ச.மீ.

10% பூங்கா பொது ஒதுக்கீட்டுக்கு ஈடாக அரசின் வழிகாட்டி மதிப்பீட்டு கட்டணம் ரூ.1,91,006/– ஆனது 30.07.2023–ல் இணையதளத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது :

பொது உபயோகம் (PP)	:	37.30 ச.மீ.	- 0.60 %
திறவெளி - BUFFER ZONE	:	373.40 ச.மீ.	- 3.89 %
உத்தேச சாலை மற்றும் மூலை முடக்கு	:	3468.88 ச.மீ.	- 36.11 %

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது :

TANGEDCO ஒதுக்கீடு	:	41.40 ச.மீ.	- 0.67 %

உத்தேச சாலை	மூலை முடக்கு
9.00 மீ சாலைகளுக்கு	1.50 x 1.50 மீ.
7.20 மீ சாலைகளுக்கு	1.50 x 1.50 மீ.

நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலகத்திற்கு அனுப்பப்படவில்லை என்றும் தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. அரசாணை எண் : 71, ஊ.வ.துறை நாள்: 16.06.2003 (அ) அரசாணை எண் : 134, ந.நி.(ம) கு.வ.துறை, நாள்: 20.09.2002–ன்படி சாலைகள் ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு மனுதாரரால் தானமாக ஒப்படைப்பு செய்யப்படவேண்டும். மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு நில உரிமைக்கு உள்ளாட்சியே பொறுப்பு என்பதுடன் உள்ளாட்சியினால் வழங்கப்பட்ட நில உரிமை சான்றின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'0" x 4'0" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6. அரசாணை எண்.181, நாள்.09.12.2020–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களை தவறாமல் அனுசரிக்கப்பட வேண்டும்.

7. மனுதாரர் மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள், பூங்கா மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகளை வருவாய் துறையின் உட்பிரிவு செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

8. உத்தேச மனைப்பிரிவு சாலையினை நிலையிலுள்ள சாலையின் மட்டத்திற்கு ஏற்றவாறு மண் நிரப்பி சாலை அமைக்கப்பட வேண்டும்.

ம. வ. / வே. உ. தி. கு. (வே.மா.) எண் : 41 / 2023

திட்ட அனுமதி எண் : 41 / 2023

உறுப்பினர் செயலர் (முகூபொ), வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம் /
உதவி இயக்குநர் / இணை இயக்குநர் (முகூபொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், மதுரா மெட்டுகுளம் ஊராட்சி, சர்வே எண் 164/1சி–ல் 1 முதல் 37 வரை உள்ள மனைகளுக்கு மனைப்பிரிவு தீர்வை எண்: 374/ 2023, நாள்: 29.09.2023 என்ற அசல் ஆணைகளுக்கிணங்க இம்மனைப்பிரிவுகளுக்கு அனுமதி அளித்து பதிவுசெய்யலாகிறது.

தலைவர்
மெட்டுகுளம் ஊராட்சி
காட்பாடி ஒன்றியம், (வே.மா.)

மெட்டுகுளம் ஊராட்சி மன்றம்
காட்பாடி ஒன்றியம்

Document certified by Elumalai Anandhan.
Signed by: Joint Director
Location: VELLORE
Date: 2023.10.04 10:40:49